**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 25.09.2026
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## TNAU மற்றும் SVPISTM இடையே கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU), மத்திய ஜவுளித் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தன்னாட்சி நிறுவனமான சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச ஜவுளி மற்றும் மேலாண்மை பள்ளி (SVPISTM), கோயம்புத்தூர் உடன் பட்டுப்புழுவியல் மற்றும் ஜவுளித் துறைகளில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டுள்ளது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், பதிவாளர் மற்றும் பொறுப்பு துணைவேந்தர் முனைவர் மு. ரவீந்திரன் மற்றும் SVPISTM, இயக்குநர் முனைவர் பிஸ்வரஞ்சன் கோஷ் ஆகியோர் கையெழுத்திட்டனர். இந்நிகழ்வில் வனவியல் முதன்மையர் முனைவர் அ. பாலசுப்ரமணியன், வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர்ப் பாதுகாப்பு ஆய்வு மைய இயக்குநர் முனைவர் மு. சாந்தி மற்றும் இரு நிறுவனங்களின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதைத் தொடர்ந்து, SVPISTM, கோயம்புத்தூரின் இயக்குநர் முனைவர் பிஸ்வரஞ்சன் கோஷ் மற்றும் அவரது குழுவினர், வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர்ப் பாதுகாப்பு ஆய்வு மைய இயக்குநர் முனைவர் மு. சாந்தி, பட்டுப்புழுவியல் துறைப் பேராசிரியரும் தலைவருமான முனைவர் கே.ஏ. முருகேஷ், உதவிப் பேராசிரியர் முனைவர் பி. பிரியதர்ஷினி மற்றும் பட்டுப்புழுவியல் துறை குழுவினருடன் பட்டு பதப்படுத்துதல் மற்றும் ஜவுளித் தொழில்நுட்பப் பயன்பாடுகள் தொடர்பான கூட்டு நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடினர்.

இந்த ஒத்துழைப்பு, பட்டுப்புழுவியல் மாணவர்கள் பட்டு பதப்படுத்துதல், ஜவுளித் தொழில்நுட்பப் பயன்பாடுகள் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் உருவாக்கம் ஆகியவற்றில் நடைமுறை அறிவையும் நேரடி பயிற்சி அனுபவத்தையும் பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்கும். மேலும், மேலும்,

**SVPISTM** நிறுவனத்தின் நவீன ஜவுளி ஆய்வக வசதிகளைப் பயன்படுத்துவதன் மூலம் வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி மற்றும் நடைமுறைப் பயிற்சி மேம்படும்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மாணவர்களின் அறிவுத்திறன் மேம்பாடு, ஆசிரியர் மற்றும் விஞ்ஞானிகளின் கலந்துரையாடல், கூட்டு ஆராய்ச்சி, தொழில்நுட்ப நிபுணத்துவப் பரிமாற்றம் மற்றும் நிறுவனங்களுக்கிடையேயான இணைப்புகளை மேலும் வலுப்படுத்தும். மேலும், தொழில்நுட்பப் பரிமாற்றம், திறன் மேம்பாடு மற்றும் பட்டுப்புழுவியல் மற்றும் ஜவுளித் துறைகளில் புதுமையான பயன்பாடுகள் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை உருவாக்குவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தும். இக்கூட்டாண்மை கல்வி நிறுவனங்களுக்கு இடையேயான இணைப்பை வலுப்படுத்துவதுடன், கல்வி, ஆராய்ச்சி மற்றும் திறன் மேம்பாடு சார்ந்த கூட்டு நடவடிக்கைகளுக்கு சிறந்த தளத்தை உருவாக்கும்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***